Tamil Americans United
Political Action Committee

P.O. Box 33494 | Raleigh | NC 27636 | USA
info@tamilamericansunited.com | (+1) 919-230-4279

# ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கை குழு

27-01-2022

## 13ம் திருத்தம் தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கான ஒரு தீர்வாக கொள்ள முடியாது

13ம் திருத்தத்தின் வழிவந்த மாகாணசபை ஆட்சி முறை தமிழர்களின் அடிப்படை பிரச்சனைகளான நில ஆக்கிரமிப்புகள், நிலப்பறிப்புகள், ஈழத் தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றியமைப்பதற்கான சிங்கள குடியேற்றங்கள், தமிழ்த் தேசத்தின் கட்டமைப்புகள் மீதான அழிப்பு நடவடிக்கைகள்; போன்றவற்றில் எதையும் தீர்க்கவில்லை, தீர்க்கவும் வலுவற்றது. 13ம் திருத்தமும் இதன் கீழான மாகாண சபை முறைமையும் 34 வருடங்களாக அமுலில் உள்ளது.

சிங்களப் பேரினவாதத்தைப் பாதுகாத்து வருகின்ற ஒற்றையாட்சியின் கீழ்வரும் எந்த ஒரு அரசியல் தீர்வும் தமிழர்களின் மீதான சிங்கள அரசின் இனவழிப்பைத் தடுக்கும் வலுவைக் கொண்டிருக்காது. 13ம் திருத்தத்தின் முழுமையான அமுல்படுத்தல் என்பது இந்திய அரசின் சர்வதேச கடப்பாடு மட்டுமன்றி தான் ஒரு பிராந்திய வல்லரசு என்ற கௌரவத்தைப் பேணுவதற்கும் தேவையானது. அதை முடிவு செய்ய வேண்டியது இந்திய அரசே அன்றி இந்தியாவின் நலன்களுக்கு மட்டுமே தேவையான ஒன்றை நாம் இந்திய அரசிடம் கோரிக்கையாக முன்வைக்க வேண்டியதில்லை.

ஈழத் தமிழர் இன்று இந்தியாவிடம் கூற வேண்டியது என்னவென்றால் ஈழத் தமிழர்கள் இந்தியாவின் நண்பர்கள் மாத்திரமல்லாது தமிழகத்தமிழர்களின் இரத்த உறவுகள். ஈழத் தமிழர்கள் இந்த நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார அடிப்படையில் பலமானவர்களாகவும் மற்றும் இலங்கை அரசியலில் சிங்களவர்களுடன் சம பங்காளிகளாகவும் இருந்தால் இந்திய நலன்களுக்கு எதிராக சிங்கள தலைவர்கள் செல்வதை தமிழர்கள் தடுப்பார்கள். அதே வேளை இனவழிப்பிலிருந்து ஈழத் தமிழர்கள் பாதுகாப்பைப் பெறுவதற்கு ஈழத் தமிழர்களுக்கு அவர்களது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த ஒரு அரசியல் தீர்வே தேவை. ஈழத் தமிழர்கள் மற்றும் இந்தியாவின் நலன்கள் இந்த ஒரு புள்ளியில் சங்கமிக்கின்றது என்பதையே நாம் இன்று இந்திய அரசுக்குச் சொல்ல வேண்டும்.

நாம் இந்தியாவுக்கு மட்டுமல்லாது உலகிற்கே சொல்ல வேண்டியது தமிழர்கள் ஒரு தேசமென்ற அடிப்படையிலும் அவர்களுக்கு எதிராக சிங்கள அரசு காலங்காலமாக இனவழிப்பில் ஈடுபட்டு வருகின்றது என்ற அடிப்படையிலும் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, வலிந்து காணமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, பயங்கரவாத தடைசட்டத்தை நீக்குதல் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துவதுடன் அவற்றுக்கான தீர்வாக தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான ஒரு சுதந்திர தமிழீழ தாயகத் தீர்வையே தமிழ் மக்கள் நாடி நிற்கின்றார்கள் என்பதும் அதனை நிரூபிக்க தமிழ் மக்களின் மத்தியில் கருத்தறியும் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடாத்த இந்தியாவும் சர்வதேசமும் முன்வரவேண்டும் என்ற கோரிக்கையையுமே முன்வைக்க வேண்டும்.

இலங்கை-இந்திய அரசுகள் தமிழருக்கான அரசியல் தீர்வாக 13வது அரசியல் திருத்தச் சட்டத்தையே வலியுறுத்தி வருகின்றன. அத்துடன் தற்போது தாயகத்தில் சில தமிழர் தரப்புகளினால் முன்னெடுக்கப்படும் அரசியல் நகர்வுகள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழர் மீது 13வது திருத்தச் சட்டத்தை திணித்துவிடும் சக்திகளின் முயற்சிக்கு வலுச்சேர்க்குமென அஞ்சவேண்டியுள்ளது. இந்நிலையில் எமக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பிராந்திய மற்றும் சர்வதேச தரப்புகளிடம் ஒரு தேசமாக மீண்டும் ஒரு முறை உரத்து சொல்லவேண்டியுள்ளது. எனவே இதுதொடர்பில் தாயத்தில் 30ம் திகதி நடைபெறும் பேரணிகள் பொதுக்கூட்டங்கள் என்பவற்றுக்கு வலுசேர்க்கும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற சகல பேதங்களும் கடந்து ஒத்துழைக்குமாறு அனைத்து தமிழ் மக்களிடமும் அன்புரிமையுடன் கேட்டுகொள்கிறோம்.